ஜூலை 27-2025




அருட்பணி.நல்ல ஜேக்கப்
உதவிப் பங்குத் தந்தை
புனித.கத்திரீனம்மாள் ஆலயம், திருப்பூர்,
கோவை மறைமாவட்டம்

# பொதுகாலம் 17 ம் வாரம்-ஞாயிறு

## தொடக்க நூல் 18:20-32, கொலோசையர் 2:12-14, லூக்கா 11:1-13

விடாமல் கேட்போம்!
அவரும் நம்மை விடமாட்டார்!

தொடக்க நூல் 28:15- நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வேன். ஏனெனில்இ நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன் என்றார்.

இது ஒரு கற்பனை கதை. ஒரு முறை இயேசுவும் பேதுருவும் பக்கத்து ஊரிலே நற்செய்தி அறிவிக்க சென்று கொண்டிருந்தார்களாம். போகிற வழியிலே 3 மாடு வண்டிகள் சேற்றிலே புதையுண்டுஇ வெளி வருவதற்கு போராடிக்கொண்டிருந்ததாம்.முதல் மாட்டு வண்டிக்காரன் மாட்டினை அடிப்பதும், கடவுளை பழித்துரைத்தும் கொண்டிருந்தான். இயேசு அவனை கண்டுக்கவே இல்லை. இரண்டாமவன் மாட்டினை துன்புறுத்தவில்லை, அதை வெளியே எடுக்க முயற்சியும் செய்யவில்லை. ஆனால் கடவுளிடம் மட்டும் உருக்கமாக வேண்டி கொண்டிருந்தானாம். இயேசு அவன் அருகில் சென்று அவனை ஆசீர்வதித்துவிட்டு கடந்து சென்றாராம். மூன்றாமவன் ஒரு பக்கம் கடவுளிடம் வேண்டினான், இன்னொரு பக்கம் தனது சக்தியை எல்லாம் திரட்டி அந்த மாட்டினை காப்பாற்ற முயன்றான். இயேசு அவனருகில் சென்று அவனோடு தோள் சேர்ந்து உதவி செய்தாராம். இதை பார்த்த பேதுரு மற்ற 2 நபர்களும் தானே கஷ்டபட்டு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உதவாமல் இவனுக்கு மட்டும் ஏன் உதவி செய்தீர்கள் என்றார்? அதற்கு இயேசு முதல் மனிதன் கடவுள் மீதும் நம்பிக்கை இல்லாமல் மாடின் மீதும் அக்கறை இல்லாமல் இருந்தான். எனவே அவனுக்கு என் உதவி தேவைப்படவில்லை. இரண்டாமவன் என் மீது நம்பிக்கை கொண்டிருந்தான் ஆனால் மாட்டினை விடுவிக்க முயற்சிகூட செய்யவில்லை. எனவே அவனுக்கும் என் உதவி தேவைப்படவில்லை. மூன்றாமவன் ஒரு பக்கம் நம்பிக்கை கொண்டான் இன்னொரு பக்கம் தன் முழு பலத்தையும் பயன்படுத்தி முயற்சி செய்தான் . அவனுக்கு தான் என் உதவி தேவைப்பட்டது என்றாராம்.

இன்றைய முதல் வாசகத்தின் மூலம் பிறருக்காகப் பரிந்து பேசி மன்றாடும் பரிந்துரையாளராக நம் முன் நிமிர்ந்து நிற்கிறார் ஆபிரகாம். அவரே பரிந்துரை மன்றாட்டுகளின் பாதுகாவலராகவும் திகழ்கிறார். சோதோம், கொமோரா நகர்களை ஆண்டவர் அழிக்கத் திருவுளம்கொண்டபோது, ஆபிரகாம் அந்த மக்களுக்காகப் பரிந்துபேசி, இறைவனிடம் மன்றாடுகிறார். பரிந்துரை மன்றாட்டிற்கு இலக்கணமும் வகுக்கிறார். இறைவனோடு ஒன்றித்து, நல்லுறவு கொள்பவர்களே பரிந்துரைக்கத் தகுதி பெற்றவர்கள். இறைவனைப் பல்வேறு விதங்களில் ஆபிரகாம் புகழ்ந்துரைப்பதைப் பார்க்கிறோம். தலைவரே, அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர் என்று அழைத்து இறைபுகழ் பாடுகிறார். நமது மன்றாட்டுகள் இறைபுகழ்ச்சியைத் தொடர்ந்தே வரவேண்டும். அதேபோல் ஆபிரகாம் மனந் தளர்ந்துவிடவில்லை. மீண்டும், மீண்டும் இறைவனோடு உரையாடி, வாதாடி, அந்த நகர்களிலுள்ள மக்களுக்காக மன்றாடுகிறார். பரிந்துரை மன்றாட்டுகள் இவ்வாறே செபிக்கப்பட வேண்டும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தின் மூலம் கர்த்தர் கற்பித்த செபம் எனவும் இயேசு கற்றுத் தந்த இறைவேண்டல் எனவும் அழைக்கப்படுகின்ற மன்றாட்டு மத்தேயு நற்செய்தியிலும் லூக்கா நற்செய்தியிலும் சிறிது மாறுபட்ட வடிவத்தில் உள்ளன (காண்க: மத் 6:9–15; லூக் 11:2–4). கடவுளை நாம் தந்தை என அழைக்கும்படி இயேசு கேட்கின்றார். இயேசுவே கடவுளைத் தந்தை எனவும் என் தந்தை எனவும் பட தருணங்களில் அழைக்கிறார். மிக நெருக்கமான உறவை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்த இச்சொல் அப்பா என்னும் பொருள் தருவது. இயேசு பேசிய அரேமிய மொழிச் சொல்லும் அப்பா என்னும் வடிவம் கொண்டதே. கடவுளைத் தந்தை என அழைப்பதன் பொருள் மூன்று விதங்களில் வெளிப்படுகிறது: அதாவது, கடவுள் அனைத்தையும் படைத்தவர், அனைத்தையும் ஆள்பவர், அனைத்தையும் பேணிக்காப்பவர். இவ்வாறு மனிதருக்கு அனைத்து நலன்களையும் அளித்து, அவர்களைக் காப்பவர் என்பதால் கடவுளைத் தந்தை என அழைப்பது பொருத்தமே. உரோமை மன்னர்களும் நாட்டுத் தந்தை என அழைக்கப்பட்டார்கள். ஆனால், ஆண்வழி சமுதாயத்தில் ஆணாதிக்கம் நிலவிய பின்னணியில் கடவுளைத் தந்தை என அழைத்து, அதிலிருந்து ஆண்கள் பெண்களை அடக்கி ஆள்பவர்கள் என நாம் பொருள்கொண்டு, கடவுளை அப்பாணியில் ஓர் ஆணாகவும் தந்தையாகவும் உருவகிப்பது தவறாகும். ஏனென்றால் விவிலியம் காட்டுகின்ற கடவுள் இத்தகைய ஆணாதிக்கக் கடவுள் அல்ல. கடவுள் நம் தந்தை என்பதன் உண்மைப் பொருள் அவர் நமக்கு ஊற்றாகவும் தோற்றுவாயாகவும் இருக்கிறார் என்பதும், நம்மை அன்போடு பராமரித்துக் காக்கிறார் என்பதும் ஆகும். இப்பண்புகளை நாம் பெண்மைக்கும் ஏற்றி உரைக்கலாம். எனவே கடவுள் நமக்குத் தந்தையும் தாயுமாக இருக்கிறார் என நாம் கூற முடியும். அது மட்டுமல்ல, கடவுள் தம் ஆட்சியில் நாம் பங்கேற்க வேண்டும் என்றால் ஒரு சிறு குழந்தைபோல நாம் மாற வேண்டும் எனக் கேட்கின்றார். எனவே, ஆட்சி அதிகாரமும் அடக்குமுறையும் கடவுளின் பண்பல்ல, மாறாக அன்போடு அனைவரையும் அரவணைத்து, சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோரையும் உரிமை மறுக்கப்பட்டோரையும் மதித்து ஏற்கும் பண்பே கடவுளின் உள்ளார்ந்த இயல்பு. இவ்வாறு நாம் கடவுளை உருவகித்துஇ அவரை அணுகும்போது நம் உள்ளத்தில் பிள்ளைக்குரிய பாசமும் பணிவும் தோன்றும். கடவுளின் பாதுகாப்பு நமக்கு எப்போதும் உண்டு என்னும் உணர்வும் நம்மில் ஆழமாக வெளிப்படும்.



கேளுங்கள் தேடுங்கள், தட்டுங்கள் போன்ற வார்த்தைகள் நாம் செய்ய வேண்டிய செயல்களைக் குறிக்கக்கூடிய சொற்களாக இருக்கிறது. இந்த சொற்களின் அடிப்படையான பொருள்: முயற்சி. முயன்றால் நாம் பெற முடியாதது ஒன்றுமில்லை. அந்த முயற்சி தான், நமது விசுவாச வாழ்வின் அடித்தளம். அந்த முயற்சியைப் பற்றிப்பிடித்து விட்டால், நாம் இந்த உலகத்தில் அடைய நினைப்பதை நிச்சயமாக அடைய முடியும்.

நாம் முயற்சி எடுக்க வேண்டும். ஒருபோதும் சோம்பேறிகளாக வாழக்கூடாது. எதிர்மறை சிந்தனை உடையவர்களாக இருக்கக்கூடாது. இந்த உலகத்தில் நம்மை விட எத்தனையோ பேர் குறைகளோடு படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடவுளிடத்தில் முறையிடுவதற்கும், சண்டை போடுவதற்கும் எவ்வளவோ இருக்கிறது. அது நமது பார்வையில் நியாயமானதாகக் கூட தோன்றலாம். ஆனால், அவர்கள் அதையெல்லாம் பற்றி எண்ணுவதை விட்டுவிட்டு, மிக உறுதியாக வாழ்வில் முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். வாழ்வை மகிழ்வோடு வாழ்ந்திருக்கிறார்கள். தடைகளையும், சோதனைகளையும் வலிமையோடு வென்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே நமக்கு சிறந்த உதாரணங்களாக வாழ்வில் இருக்கிறார்கள்.

கடவுள் நமக்கு கொடுத்திருக்கிற வாழ்வை, நாம் ஒருமுறை தான் வாழ முடியும். அந்த வாழ்வை நாம் முயற்சியோடு வாழ்வோம். எந்த சூழ்நிலையிலும் துவண்டுவிடாது, நம்பிக்கையை பற்றிப்பிடித்துக் கொண்டு, தொடர்ந்து முன்னேறுவோம். எதனையும் கருத்தில் கொள்ளாமல் முயன்று, வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.